
என் தேவா நீர் எங்கே
My God,
Where Are You

Album 14 – Songs of the Overcomer – Victory Through the Blood of the Lamb

Song 1 என் தேவா நீர் எங்கே

Psalm 42 (As the deer pants for streams of water, so my soul pants for you, my God. My soul thirsts for God, for the living God. When can I go and meet with God? Why, my soul, are you downcast? Why so disturbed within me? Put your hope in God, for I will yet praise him, my Savior and my God.)

என் தேவா நீர் எங்கே
என் கன்மலையாகிய தேவா நீர் எங்கே?
என் ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்
கர்த்தரை நோக்கி காத்திரு

என் ஆத்துமா உந்தன்மேல் தாகமாய் உள்ளது
ஜீவனுள்ள தேவன் நீர் ஏன் என்னை மறந்தீர்?
சத்துருவினால் ஒடுக்கப்பட்டேன் துக்கத்துடனே திரிந்துவந்தேன்
தேவா நீர் எங்கே? என்னை நோக்கிடுமே

என் தேவா நீர் எங்கே
என் கன்மலையாகிய தேவா நீர் எங்கே?
என் ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்
கர்த்தரை நோக்கி காத்திரு

KJC-DNN

என் தேவா நீர் எங்கே
என் கன்மலையாகிய தேவா நீர் எங்கே?
என் ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்
கர்த்தரை நோக்கி காத்திரு

என் தேவா நீர் எங்கே
என் கன்மலையாகிய தேவா நீர் எங்கே?
என் ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்
கர்த்தரை நோக்கி காத்திரு

என் ஆத்துமா உந்தன்மேல் வாஞ்சித்துக் கதறுது
கிருபைத்தரும் தேவன் நீர் ஏன் என்னை கைவிட்டீர்?
இரட்சிப்புக்காய் காத்திருந்தேன் விண்ணப்பத்தை ஏறெடுத்தேன்
தேவா நீர் எங்கே ? என்னை நோக்கிடுமே.

என் தேவா நீர் எங்கே
என் கன்மலையாகிய தேவா நீர் எங்கே?
என் ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்
கர்த்தரை நோக்கி காத்திரு

என் தேவா நீர் எங்கே
என் கன்மலையாகிய தேவா நீர் எங்கே?
என் ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்
கர்த்தரை நோக்கி காத்திரு

என் ஆத்துமா உந்தன்மேல் வாஞ்சித்துக் கதறுது
கிருபைத்தரும் தேவன் நீர் ஏன் என்னை கைவிட்டீர்?
இரட்சிப்புக்காய் காத்திருந்தேன் விண்ணப்பத்தை ஏறெடுத்தேன்
தேவா நீர் எங்கே ? என்னை நோக்கிடுமே

என் ஆத்துமா உந்தன்மேல் வாஞ்சித்துக் கதறுது
கிருபைத்தரும் தேவன் நீர் ஏன் என்னை கைவிட்டீர்?
இரட்சிப்புக்காய் காத்திருந்தேன் விண்ணப்பத்தை ஏறெடுத்தேன்
தேவா நீர் எங்கே ? என்னை நோக்கிடுமே

KJC-DNN

உம் வெளிச்சமும் உம் சத்தியமும்

YOUR LIGHT AND TRUTH



Song 2 உம் வெளிச்சமும் உம் சத்தியமும்

Psalm 43 (Send out your light and your truth; let them lead me; let them bring me to your holy hill and to your dwelling! Why are you cast down, O my soul? Hope in God; for I shall again praise him, my salvation and my God)

உம் வெளிச்சமும்
உம் சத்தியத்தையும்
அனுப்பி என்னை நடத்தும்
பரிசுத்த ஸ்தலத்தில் நிறுத்தும்
துதிப்பேன் இன்னும் துதிப்பேன்
உம்மை சுரத்தினால் துதிப்பேன்

என் அரணும்
என் கோட்டையும் நீர்தான்
உம்மை நோக்கிடுவேன்
எனக்கு ஆனந்த மகிழ்ச்சி தாரும்
துதிப்பேன் இன்னும் துதிப்பேன்
உம்மை சுரத்தினால் துதிப்பேன்

உம் வெளிச்சமும்
உம் சத்தியத்தையும்
அனுப்பி என்னை நடத்தும்
பரிசுத்த ஸ்தலத்தில் நிறுத்தும்

KJC-DNN

என் ஆத்துமாவும்
என் உள்ளமும்
உம்மை நோக்கிக் காத்திருக்கும்
உம் பீடத்திலே நிற்கவே ஏங்கியிருக்கும்.
துதிப்பேன் இன்னும் துதிப்பேன்
உம்மை சுரத்தினால் துதிப்பேன்

உம் வெளிச்சமும்
உம் சத்தியத்தையும்
அனுப்பி என்னை நடத்தும்
பரிசுத்த ஸ்தலத்தில் நிறுத்தும்

எனக்காக வழக்காடும்
என்னையே தப்புவியும்
நான் ஏன் துக்கத்துடன் திரியவேண்டும்?
நான் ஏன் ஒடுக்கப்பட்டு நசுங்கவேண்டும்?
துதிப்பேன் இன்னும் துதிப்பேன்
உம்மை சுரத்தினால் துதிப்பேன்

உம் வெளிச்சமும்
உம் சத்தியத்தையும்
அனுப்பி என்னை நடத்தும்
பரிசுத்த ஸ்தலத்தில் நிறுத்தும்

துதிப்பேன் இன்னும் துதிப்பேன்
உம்மை சுரத்தினால் துதிப்பேன்

KJC-DNN

Your Light and Truth



உம்மை நாங்கள் மறக்கவில்லை

Song 3 உம்மை நாங்கள் மறக்கவில்லை

Psalm 44 (We have not forgotten you, nor have we been false to your covenant… For your sake we face death all day long; we are considered as sheep to be slaughtered. Yet in all these things we are more than conquerors through Him who loved us – Romans 8:36–37)

உம்மை நாங்கள் மறக்கவில்லை
உம் உடன்படிக்கைக்குத் துரோகம் செய்யவில்லை
எங்கள் இருதயம் பின்வாங்கவில்லை
எங்கள் காலடிகள் உம்பாதையை விலக்கவில்லை

நீர் எங்களைத் தள்ளிவிட்டு, நாணப் பண்ணுகிறீர்
எங்கள் சேனைகளுடனே நீர் செல்லாதிருக்கிறீர்
எங்களுக்கு தேவா நீர் உதவி செய்தருளும்
உம்முடைய கிருபையால் எங்களை மீட்டுவிடும்

உம்மை நாங்கள் மறக்கவில்லை
உம் உடன்படிக்கைக்குத் துரோகம் செய்யவில்லை
எங்கள் இருதயம் பின்வாங்கவில்லை
எங்கள் காலடிகள் உம்பாதையை விலக்கவில்லை

நீர் உம்முடைய ஜனங்களை இலவசமாக விற்கிறீர்
நாங்கள் ஜாதிகளுக்குள்ளே பழமொழியாயிருக்கச் செய்கிறீர்
உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்
எங்களை நீர் ஆராய்ந்து விசாரித்துவிடும்

உம்மை நாங்கள் மறக்கவில்லை
உம் உடன்படிக்கைக்குத் துரோகம் செய்யவில்லை
எங்கள் இருதயம் பின்வாங்கவில்லை
எங்கள் காலடிகள் உம்பாதையை விலக்கவில்லை

நீர் எங்களை வலுசர்ப்பங்களின் இடத்தில் நொறுக்கினீர்
மரண இருளினாலே எங்களை மூடியிருக்கச் செய்தீர்
ஏன் உம்முடைய முகத்தை மறைத்து எங்களை மறக்கின்றீர்
எங்களுக்காக விழித்துக்கொள்ளும் எழுந்தருளும்

உம்மை நாங்கள் மறக்கவில்லை
உம் உடன்படிக்கைக்குத் துரோகம் செய்யவில்லை
எங்கள் இருதயம் பின்வாங்கவில்லை
எங்கள் காலடிகள் உம்பாதையை விலக்கவில்லை

நீர் எங்களுடைய ஆத்துமாவை புழுதிமட்டும் தாழ்த்தினீர்
எங்கள் வயிறை தரையோடு ஒட்டியிருக்கச் செய்தீர்
ஏன் எங்கள் சிறுமையையும் நெருக்கத்தையும் மறக்கின்றீர்
எங்களை உம் வலக்கரத்தினால் இரட்சித்தருளும்

உம்மை நாங்கள் மறக்கவில்லை
உம் உடன்படிக்கைக்குத் துரோகம் செய்யவில்லை
எங்கள் இருதயம் பின்வாங்கவில்லை
எங்கள் காலடிகள் உம்பாதையை விலக்கவில்லை

நீர் எங்களை ஆடுகளைப் போல் இறையாக ஒப்புக்கொடுத்தீர்
ஜாதிகளுக்குள்ளே எங்களைச் சிதறடித்தீர்
உம்மாலே நாங்கள் சத்துருக்களை கீழே விழத்தாக்கி
எங்கள் பகைஞர்களை உம்முடைய நாமத்தினால் மிதிப்போம்

உம்மை நாங்கள் மறக்கவில்லை
உம் உடன்படிக்கைக்குத் துரோகம் செய்யவில்லை
எங்கள் இருதயம் பின்வாங்கவில்லை
எங்கள் காலடிகள் உம்பாதையை விலக்கவில்லை

நீர் எங்களுடைய இருதயத்தை ஆராய்ந்து அறிகிறீர்
நாங்கள் உமது நாமத்தை மறந்து போவதில்லை
அந்நிய தேவனை நோக்கிப் பார்த்ததில்லை
என் வில்லை நான் நம்பவில்லை நீரே என் ராஜா

உம்மை நாங்கள் மறக்கவில்லை
உம் உடன்படிக்கைக்குத் துரோகம் செய்யவில்லை
எங்கள் இருதயம் பின்வாங்கவில்லை
எங்கள் காலடிகள் உம்பாதையை விலக்கவில்லை

RJC DNN

நான் ராஜாவைப்
பாடுகிறேன்
I sing of the
King

Song 4 நான் ராஜாவைப் பாடுகிறேன்

Psalm 45 (My heart overflows with a pleasing theme; I address my verses to the king; my tongue is like the pen of a ready scribe. You are the most handsome of the sons of men; grace is poured upon your lips.)

நான் ராஜாவைப் பாடுகிறேன்
நான் கவிதையை சொல்கிறேன்
என் நாவினால் எழுதுகிறேன்

என் இதயம் பொங்குதே
என் இதயம் பொங்குதே
என் இதயம் பொங்குதே
என் இதயம் பொங்குதே

ஓ ராஜா, ஓ ராஜா, உம் கவிதை என் உள்ளம் நிரப்பும்
ஓ ராஜா, ஓ ராஜா, உம் இசை என் இதயம் பொங்கும்
ஓ ராஜா, ஓ ராஜா, உம் அழகு என் பாடல் ஆகும்

எல்லா மனிதரிலும் நீர் மகா சவுந்தரியவான்
உம் உதடுகளில் அருள் பொழிகிறதே
எல்லா விதங்களிலும் நீரே சவரியவான்
உம் மகத்துவத்தில் ஜெயமாக ஏரிவாரும்

ஓ ராஜா, ஓ ராஜா, உம் கவிதை என் உள்ளம் நிரப்பும்
ஓ ராஜா, ஓ ராஜா, உம் இசை என் இதயம் பொங்கும்
ஓ ராஜா, ஓ ராஜா, உம் அழகு என் பாடல் ஆகும்

நான் ராஜாவைப் பாடுகிறேன்
நான் கவிதையை சொல்கிறேன்
என் நாவினால் எழுதுகிறேன்

என் இதயம் பொங்குதே
என் இதயம் பொங்குதே
என் இதயம் பொங்குதே
என் இதயம் பொங்குதே

சத்தியத்தினிமித்தம் உம் சாந்தத்தினிமித்தம்
உம் சிங்காசனம் என்றென்றைக்கும் உள்ளதே
நீதியை விரும்புகிறீர் அக்கிரமத்தை வெறுக்கிறீர்
உம் ராஜ்யத்தின் செங்கோலல் ஆட்சி செய்ய வாரும்

ஓ ராஜா, ஓ ராஜா, உம் கவிதை என் உள்ளம் நிரப்பும்
ஓ ராஜா, ஓ ராஜா, உம் இசை என் இதயம் பொங்கும்
ஓ ராஜா, ஓ ராஜா, உம் அழகு என் பாடல் ஆகும்

நான் ராஜாவைப் பாடுகிறேன்
நான் கவிதையை சொல்கிறேன்
என் நாவினால் எழுதுகிறேன்

என் இதயம் பொங்குதே
என் இதயம் பொங்குதே
என் இதயம் பொங்குதே
என் இதயம் பொங்குதே

KJC-DNN

I Sing of the King

நம்மோடிருக்கிறார்
சேனைகளின் கர்த்தர்

Song 5 நம்மோடிருக்கிறார் சேனைகளின் கர்த்தர்

Psalm 46 (God is our refuge and strength, a very present help in trouble. Therefore we will not fear though the earth gives way… The Lord of hosts is with us; the God of Jacob is our fortress.)

நம்மோடிருக்கிறார் சேனைகளின் கர்த்தர்
அடைக்கலமானவர் யாக்கோபின் தேவனவர்
உயர்ந்திருக்கின்றார் பூமியிலே - நீரே
துணையானீரே என் ஆபத்துக்காலத்திலே

பூமியின் எல்லைவரை யுத்தம் செய்கிறார் -தேவன்
வில்லை ஒடித்து ஈட்டியை முறிக்கின்றார்.
இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்-நீரே
துணையானீரே என் ஆபத்துக்காலத்திலே

நம்மோடிருக்கிறார் சேனைகளின் கர்த்தர்
அடைக்கலமானவர் யாக்கோபின் தேவனவர்
உயர்ந்திருக்கின்றார் பூமியிலே - நீரே
துணையானீரே என் ஆபத்துக்காலத்திலே

ஜாதிகளை கொந்தலிக்கச் செய்கின்றார் - தேவன்
ராஜ்யங்களை தத்தளிக்கவும் செய்கின்றார்
கர்த்தர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணுகிறார்- நீரே
துணையானீரே என் ஆபத்துக்காலத்திலே

நம்மோடிருக்கிறார் சேனைகளின் கர்த்தர்
அடைக்கலமானவர் யாக்கோபின் தேவனவர்
உயர்ந்திருக்கின்றார் பூமியிலே - நீரே
துணையானீரே என் ஆபத்துக்காலத்திலே

பூமியிலே பாழ்க்கடிப்புக்களை நடப்பிக்கிறார்
கர்த்தருடைய செயல்களை பார்க்கவைக்கிறார்
பூமிநிலைமாறினாலும், மலைகள் சாய்ந்து போனாலும் -நீரே
துணையானீரே என் ஆபத்துக்காலத்திலே

நம்மோடிருக்கிறார் சேனைகளின் கர்த்தர்
அடைக்கலமானவர் யாக்கோபின் தேவனவர்
உயர்ந்திருக்கின்றார் பூமியிலே - நீரே
துணையானீரே என் ஆபத்துக்காலத்திலே

சமுத்திரத்தின் ஜலங்கள்லெல்லாம் கொந்தளித்து பொங்கினாலும்
அதின் பெருக்கத்தினால் பர்வதங்கள் அதிர்ந்து போனாலும்
பூமியெங்கும் பட்டுப்போய் உருகிப் போனாலும்- நீரே
துணையானீரே என் ஆபத்துக்காலத்திலே

நம்மோடிருக்கிறார் சேனைகளின் கர்த்தர்
அடைக்கலமானவர் யாக்கோபின் தேவனவர்
உயர்ந்திருக்கின்றார் பூமியிலே - நீரே
துணையானீரே என் ஆபத்துக்காலத்திலே

KJC-DNN

Clap Your Hands



Song 6 சகல ஜனங்களே நீங்கள் கைகொட்டுங்களேன்

Psalm 47 (Clap your hands, all peoples! Shout to God with loud songs of joy! For the Lord, the Most High, is to be feared, a great king over all the earth)

சகல ஜனங்களே நீங்கள் கைகொட்டுங்களேன்
தேவனுக்கு முன்பாகத்தான் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்களேன்

உன்னதமானவரே கர்த்தர் பயங்கரமானவரே
பூமியின் மீதெங்கும் மகிமை நிறைந்த ராஜாவும் நீரே

சகல ஜனங்களே நீங்கள் கைகொட்டுங்களேன்
தேவனுக்கு முன்பாகத்தான் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்களேன்

தமக்குப் பிரியமான யாக்கோபின் தேசத்தை
சுதந்திரமாக நமக்கு கீழ்ப்படுத்தி தெரிந்தளிப்பார்

சகல ஜனங்களே நீங்கள் கைகொட்டுங்களேன்
தேவனுக்கு முன்பாகத்தான் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்களேன்

ஆர்ப்பரிப்போடே கர்த்தர் எக்காள சத்தத்தோடே
உயர எழுந்தருளினார் பரிசுத்த ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார்

சகல ஜனங்களே நீங்கள் கைகொட்டுங்களேன்
தேவனுக்கு முன்பாகத்தான் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்களேன்

தேவனைப் போற்றிப்பாடுங்கள் நமது ராஜாவைப் புகழ்ந்து பாடுங்கள்
ஆபிரகாமின் தேவனின் ஜனங்களாக சேர்ந்திருங்கள்

சகல ஜனங்களே நீங்கள் கைகொட்டுங்களேன்
தேவனுக்கு முன்பாகத்தான் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்களேன்

Clap Your Hands